பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-CC

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 29 புதன்கிழமை (13-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 48

# பிரபா - ஆயர் சந்திப்பு: பேச்சுக்கு வழி செய்யும்?

## கொழும்பில் நம்பிக்கை நிலை

கொழும்பு, ஜனவரி. 13

தமிழீழத் தேசியத் தலைவரும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவருமான திரு. வே. பிரபாகரனுக்கும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருக்கும் அங்கிலிக்கன் திருச்சபை ஆயருக்கும் இடையில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற சந்திப்பு ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பதற்கு வழிசெய்யக்கூடும்] இவ்வாறு கொழும்பில் பரவலாக நம்பப்படுகின்றது என செய்திஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

புலிகள் தலைவர்—அங்கிலிக்கன் ஆயர் சந்திப்பு பற்றிய செய்திகளை கொழும்பு அரசு சார்புப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்துள்ளன

சமாதான சூழ்நிலையை உருவாக்குவதற்கான நல்லெண்ண நடவடிக்கையாக தமது காவலில் இருந்த இரு பொலிஸாரை விடுதலை செய்வதற்கு விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் முன்வந்திருப்பது பற்றிய செய்தி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## சமாதானத்தை ஏற்படுத்த பேச்சுவார்த்தை அவசியம்

### ஆயர் வலியுறுத்தும் மூன்று விடயங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 13

"எமது நாட்டில் சமாதானமும் சகஜ நிலையும் மீள வருவதற்கு மூன்று விஷயங்கள் ஒரே நேரத்தில் இப்பொழுதே செய்யப்படவேண்டும்.

★ முதலில் எல்லோரும் ஒன்றுபட்டு இரண்டு பக்கங்களுக்கும் மக்களும் பொருள்களும் பாதுகாப்பாகவும் தடங்கல் இன்றியும் இலகுவாகப் போய்வருவதை உத்தரவாதம் செய்ய வேண்டும்.

★ இரண்டாவதாக தடை செய்யப்பட்ட 48 பொருள்கள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தி இவற்றில் பல பொருள்கள் மீதான தடையைத் தளர்த்த அரசை வலியுறுத்த வேண்டும்.

★ மூன்றாவதாக யுத்தத்தை நிறுத்த பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டும்.

இந்த மூன்று விஷயங்களும் ஒரே நேரத்தில் இப்பொழுதே செய்யப்படவேண்டும்."

அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி வண. ஜோர்ஜ் கென்னத் பெர்னாண்டோ இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாண மாநகரசபை ஒழுங்கு செய்த பொது வரவேற்பு வைபவத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் வே. பொ.

(3 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப... கிணறு கிண்டிற குண்டு எண்டு சொல்லுங்கோ!

### வாசகர்களே!

தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு உதயன் பணியாளர்களுக்கு நாளை விடுமுறை தினமாகும். அதனால் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை (15-1-93) உதயன் வெளிவரமாட்டான். சனிக்கிழமை (16-1-93) உங்கள் அபிமான நாளிதழ் உதயனை நீங்கள் வாசிக்கலாம்.

## பம்பாய் கலவரத்தில் தமிழர் மீதும் தாக்குதல்

சென்னை, ஜன. 13

பம்பாயில ஏற்பட்ட கலவரத்தில் தமிழர்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் நுழைந்த கலகக்காரர்கள், "சென்னை இந்தியரே வெளியேறுங்கள்" எனச் சத்தமிட்டவாறு தமிழர்களை அடித்தும், நொறுக்கியும், அவர்களின் சொத்துக்களைச் சூறையாடியும், தீ வைத்தும் அராஜகம் புரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது

இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகி, தமிழகத்துக்கு தப்பி ஓடி வருவோரால் சென்னை ரயில் நிலையம் நிரம்பி வழிவதாகவும்—

இதுவரை சுமார் 10 ஆயி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## 'சுப்பசொனிக்' விமானங்கள் மட்டுவிலில் குண்டு வீச்சு!

### அதிர்ச்சியால் வயோதிப மாது மரணம்

தென்மராட்சி, ஜன. 13

ஸ்ரீலங்கா விமானப்படையின் சுப்பர்சொனிக் விமானங்கள் சாவகச்சேரி மட்டுவில் பகுதியில் நேற்றுக்காலை மூன்று குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தின.

இத் தாக்குதலின் அதிர்ச்சியினால் வயோதிப மாது ஒருவர் உயிரிழந்தார்; மற்றொரு பெண் சிறு காயத்திற்கு உலக்கானார்; ஆறு வீடுகள் வரை சேதமடைந்தன; அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்பயிர்கள் பெருமளவில் நாசமாகின.

(3 ஆம் பக்கம் பார்க்க)

### குண்டு வெடித்த இடத்தில் பெரும் துரவு, கிணறு!

மட்டுவிலில் நேற்றுக்காலை சுப்பசொனிக் விமானங்கள் வீசிய குண்டுகளினால் பெரும் துரவு போன்ற கிடங்கும் கிணறு போன்ற குழியும் ஏற்பட்டுள்ளன.

குண்டு வீழ்ந்து வெடித்த ஓரிடத்தில் சுமார் ஐம்பது அடி அகலமும் பத்து அடி ஆழமும் கொண்ட துரவு ஏற்பட்டுள்ளது. மற்றைய குண்டு வெடித்த இடத்தில் சுமார் இருபது அடி அகலமும் பத்து அடி ஆழமும் கொண்ட பெரும் பள்ளமும் ஏற்பட்டுள்ளன அருகில் மலைபோல மண் குவியல் காணப்படுகிறது

கிடங்குகளிலிருந்து கிளம்பிய மண்ணினால், அருகில் அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்பயிர்கள் மூடப்பட்டுள்ளன.

(உ-ரி-15-117)

### சாவகச்சேரி சந்தையில் களேபரம்!

தென்மராட்சி, ஜன. 13

நேற்றுக் காலை சாவகச்சேரிப் பகுதியின் மீது சுப்பசொனிக் விமானங்கள் வட்டமிட்ட போது சாவகச்சேரி சந்தையில் பெரும் களேபரம் ஏற்பட்டது.

சந்தையில் கூடியிருந்த வியாபாரிகளும் பொதுமக்களும் சுப்பசொனிக் விமானங்களின் சத்தத்தைக் கேட்டதும் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

விற்பனைக்காக அடுக்கப்பட்டிருந்த பொங்கல் பானைகள் பல மக்கள் சிதறி ஓடிய களேபரத்தில் உடைந்து

(3 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜன. 13

மட்டக்களப்பு, ஆரையம்பதி, புதுக்குடியிருப்புப் பகுதியை சுற்றிவளைத்த இராணுவத்தினரும், பொலீஸாரும் அங்கிருந்த 12 தமிழர்களைக் கைது செய்தனர். அவர்கள தற்போது முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

களுவாஞ்சிக்குடிப் பகுதியில் மற்றொரு தமிழர் கைது செய்யப்பட்டார். (உ-3)

## 'குமாரி' 19 ஆம் திகதி வரும்

யாழ்ப்பாணம், ஜன. 13

கொழும்பில் பொருள்கள் ஏற்றிக் கொண்டிருக்கும் 'குமாரி' கப்பல் எதிர்வரும் 19 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர் பார்க்கப்படுகிறது.

தற்சமயம் பருத்தித்துறையில் மா இறக்கும் வேலையில் ஈடுபட்டுள்ள 'குமண' கப்பல் பெரும்பாலும நாளை மாலை கொழும்பு திரும்பும் என்றும்—

'குமண, கப்பல் கொழும்பை சென்றடைந்ததும் 'குமாரி' கப்பல் 17 ஆம் திகதி அங்கிருந்து புறப்பட்டு 19 ஆம் திகதி பருத்தித்துறையை வந்தடையும் என்றும் நேற்று மாலை கொழும்பில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (உ-3)

## பரீட்சை முடிவுகளை கப்பலில் எடுத்துவர முயற்சி

கடந்த அகஸ்டில் நடைபெற்ற ஜி. சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சையின் முடிவுகள். குமாரி கப்பல் கொழும்பிலிருந்து புறப்பட்டு வரும்போது அக்கப்பலில் அனுப்பி வைக்கப்படும் என்று கடந்த 6 ஆம் திகதி யாழ். அரச அதிபர் கொழும்பிலிருந்து அனுப்பிய செய்தி நேற்று யாழ். செயலகத்துக்குக் கிடைத்தது.

இதேசமயம்—

பரீட்சை முடிவுகளை அதற்கு முன்னர் வேறு மார்க்கமாக எடுத்துவர கொழும்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக மற்றொரு செய்தி தெரிவித்தது (உ-3-162-175)





அரசின் பொருளாதாரத் தடையைக் கண்டித்து நேற்று முன்தினம் யாழ். நகரில் நடைபெற்ற பேரணியின்போது எடுக்கப்பட்ட படங்கள். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பன்றம் கோழிக்குஞ்சுகளும், அடை வைப்பதற்கு உகந்த பன்றம், பாபடிக்ஸ், நாட்டு முட்டைகளும் உடன் விற்பனைக்கு உண்டு. பிளான்ட் பரடைஸ், இல. 152 2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (24034)

### மலிவு விற்பனை

அழகிய கலண்டர்கள் பல டிசைன்களில் விற்பனைக்கு உண்டு. வர்ணக் கலர்களில் பதிப்பித்தும், படங்கள் தனியாகவும் சிலிப் தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம். ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தக சாலை, 330, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (23910)

### வாடகைக்குத் தேவை

ஓய்வூதியம் பெறுபவருக்கு வீடு / அனெக்ஸ் / அறை வாடகைக்குத் தேவை. இருபாலை, கல்வியங்காடு, கட்டைப்பிராய், நல்லூர் விரும்பத்தக்கது. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்: இல. 480, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (24036)

### இலவச திருமண சேவை

32 வயது, திருவாதிரை, கனடாவில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். மணமக்கள் சேவை ஞாயிறு காலையில். து. விமலா, யாழ் நாச்சிமார் கோவிலடி. (24041)

### தவறிவிட்டது

09 - 01 - 1993 சனிமாலை யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் இருந்து வரும்பொழுது பாடசாலைக்கும் சில யார்கள் தூரத்திற்கும் இடையில் எனது மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிவைத்திலிங்கம், 'குற்றாலம்' இல 43, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். (24038)

### AVAILABLE

Matriculated Retired Govt. Staff Officer's Services as English Teacher available for recognised tutory. Apply S. Pillai, 123/1, Temple Road, Jaffna. (5724)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## பிரிவு - II ஆண்டு 6,7,8,9,10

ஆரம்பமாகிவிட்டன.

- ★ பிரிவு II இல் இன்னும் குறிப்பிட்ட அனுமதிகளே வழங்கப்படும்.
- ★ கணிதம், விஞ்ஞானப் பாடங்கள் வாரத்தில் நான்கு நாட்களும் நடைபெறும்.
- ★ மாதாந்தம் பரீட்சை நடத்தப்படும்.

(இ-4134)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

(13 — 01 — 1993)



மலர்வு: 13 — 06 — 1917

உதிர்வு: 14 — 12 — 1992

## அமரர் பொன்னையா தர்மபாலன்

(இளைப்பாறிய கமத்தொழில் இலாகா உத்தியோகத்தர்)

எமக்கெனவே வாழ்ந்து
எமக்குச் சிறந்த வாழ்வு தந்து
எம்மை மீளாத் துயரில் விட்டுச் சென்றதேன்
கணப்பொழுதில் காலதேவன் உங்களைக்
கவர்ந்து சென்றதேனோ?

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும், உங்கள் நினைவு எம் இதயங்களில் என்றும் பிரகாசித்துக் கொண்டே இருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம். 15-12-1992இல் நடைபெற்ற அன்னாரின் ஈமக்கிரியைகளை முன்னின்று நடத்தி உதவிய உறவினர், நண்பர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (13-01-1993) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய். (24040)

---

யாழ். பட்டப்படிப்புகள் கல்லூரி
பேராதனை - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
வெளிவாரி மாணவர் ஒன்றியம்
நடத்தும்

# பொங்கல் கலை விழா

இடம்: பட்டப்படிப்புகள் கல்லூரி
காலம்: 1993 - 0 - 14 வியாழக்கிழமை
காலை 10-00 மணி

தலைவர்: திரு. எம். பி. அருளானந்தன் (ஆசிரியர்)

- ✱ கவியரங்கம்
- ✱ சிறப்புச் சொற்பொழிவு
- ✱ இன்னிசை இராகங்கள்

ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

— வெளிவாரி மாணவர் ஒன்றியம்.

(24039)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## O/L

பிரிவு II DAY CLASSES (8-00 — 2-00)
பிரிவு III EVENING CLASS (3-15 — 6-00)
பிரிவு II SAT., SUN. CLASSES (8-00 — 3-00)

## பிரிவு II ஆண்டு 6, 7, 8, 9, 10

புதிய பிரிவுகள் ஆரம்பம்:
16 01 - 1993 (சனிக்கிழமை)

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — திரு. J. R. சூரி |
| கணிதம் | — திரு. ஜெகன் |
| ஆங்கிலம் | — திரு. விஸ்வநாதன் |
| சமூகக்கல்வி | — திரு. கோபி |
| தமிழ் | — திரு. சிவா |
| சமயம் | — திரு. கெங்கா |
| வர்த்தகம் | — திரு. கருணாகரன் |

(இ-4132)

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் மருதப்பு கயிலாசபிள்ளை

(பழக்கடை இரத்தினம்)

மலர்வு: 19-04-1925
உதிர்வு: 11-01-1991

திதி: 13 — 01 — 1993

ஆறாத் துயரில் எமை ஆழ்த்தி, இறைவனடி மீளாத் துயில் கொண்ட எமது அன்புத் தெய்வமே! ஈராண்டென்ன, நூறாண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் நெஞ்சை விட்டு நீங்காதையா!
தங்கள் ஆத்ம சாந்திக்கு என்றும் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரன்.

இல. 2, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (24018)

---

நெல்லியடி சனசமூக நிலையம்
நடத்தும்

# பொங்கல் விழாவும் மாதிரி முன் பாடசாலை திறப்புவிழாவும் பரிசளிப்பு விழாவும்

இடம்: முருகமூர்த்தி ஆலய அருகாமையில்
காலம்: 14 — 01 — 1993 வியாழன்
பிற்பகல் 4-00 மணியளவில்.

பிரதம விருந்தினர்:
கலாநிதி சி. சிறிசற்குணராசா - B. Sc., Ph. D. (U. K.)

### நிகழ்ச்சிகள்

1. கராட்டி கண்காட்சி
2. கவியரங்கம் — தலைவர் கவிஞர் இ. முருகையன்
3. யாழோசை கண்ணன் வழங்கும் " ஸபாலின் சோலோ "
4. பட்டிமண்டபம்
   நாமிருக்கும் நாடு நமதென்று அறிந்தோமா?
   நடுவர்: திரு. இ. ஜெயராஜ் (அமைப்பாளர் அகில இலங்கை கம்பன் கழகம்)

- நெல்லியடி சனசமூக நிலையம்.

(24046)

---

# விசேட அறிவித்தல்

11-01-93 உதயன் பத்திரிகையில் வந்த விளம்பரத்தின்படி எமது நிறுவனத்தில் ஆரம்பிக்க இருந்த 1993 வினா/விடை வகுப்புகள் மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளது.

## BECON
## பாரதிதாசன் கல்வி நிறுவனம்

யாழ்ப்பாணம்.

(இ 4170)

---

# ஆட்டிறைச்சிக் கடை

இருபாலைச் சந்தியில் 16-01-1993 சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

உரிமையாளர்:
சி. தங்கவேல்.

(24044)

---

# மாட்டிறைச்சிக் கடை

புத்தூர் கிழக்கு வாகரவத்தை, பிரவணி ஏத்தம் என்னும் இடத்தில் 16 01-1993 சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

உரிமையாளர்:
ச. டேவிட்.

(24043)

---

# நினைவஞ்சலி

## செல்வி ரூபி நவரெட்ணசிங்கம்

[முன்னாள் ஆசிரியை, பிரதி அதிபர் வேம்படி மகளிர் கல்லூரி (1944 — 1973)]

கால்நூற்றாண்டு காலமாக எமது கல்லூரியில் ஆசிரியராகவும், உதவி அதிபராகவும் கடமையாற்றி எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய செல்வி ரூபி நவரெட்ணசிங்கம் அவர்களின் மறைவு குறித்து பெரும் துன்பம் அடைகிறோம். அன்னார் எமது கல்லூரியில் ஆசிரியராக மட்டுமல்ல சிறந்த சாரணியத் தலைவியாகவும் இசை, பேச்சு, நாடகம், விளையாட்டு என்பவற்றில் எல்லாம் மிகத் திறமை மிக்கவராகவும் திகழ்ந்தார். அன்னாரது அன்பான சேவையை நன்றியுடன் நினைவு கூர்ந்து ஆத்ம நற்பேற்றிற்காக பிரார்த்திக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/ வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம். (இ/4171)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**

## காமினியின் புதிய யோசனை

தென்னிலங்கை நாடாளுமன்றத்தின் உபசபாநாயகரும், சிங்களக் கலா ரசிகர்களின் அபிமானத்தைப் பெற்ற திரைப்பட நடிகருமான காமினி பொன்சேகா மாத்தறையில் நடந்த கூட்டம் ஒன்றில் புதிய கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

இந்த நாட்டில் முதன் முறையாகச் சமஷ்டி ஆட்சியை அறிமுகம் செய்தவர் துட்டகைமுனு மன்னனே என்று அவர் கூறியிருக்கிறார். இந்தச் சரித்திர உண்மையை பௌத்த குருமாரும், சமஷ்டி முறையை எதிர்ப்பவர்களும் ஏன் மறந்து போயினர் என்ற கேள்வியையும் அவர் எழுப்பியுள்ளார்.

சமஷ்டி என்ற வார்த்தையைக் கேட்டதும் எல்லோரும் அலறி அடித்துக்கொள்கிறார்கள். ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டதாக நினைக்கிறார்கள். சரித்திரத்தை எவரும் மறைத்துவிட முடியாது; மறந்துவிட முடியாது என்று ஆணித்தரமாகக் கூறும் அவர்—

சமஷ்டியை பௌத்தகுருமார் உட்பட ஏனையோர் ஏற்றுக்கொள்ளத் தூண்டும் விதத்தில் அதனை "துட்டகைமுனு முறை" என்று அழைக்க வேண்டும் என ஆலோசனையும் வழங்கியுள்ளார்.

திரு. காமினி பொன்சேகாவின் இந்தக் கருத்து தென்னிலங்கையரால் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அவர் பகிரங்கமாக வெளியிட்ட இந்த யோசனையை தெற்கின் அரசியல்வாதிகளும், அரசியல் கட்சிகளும் கவனத்தில் எடுத்தால் நாட்டில் சமாதானம் அமைதி உண்டாக ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் என நம்பலாம்.

காமினியின் ஆலோசனையை அவர் சார்ந்த ஐக்கிய தேசியக் கட்சி— ஆளும் கட்சி— முதலில் ஏற்றுக் கொண்டு, சமஷ்டி அரசியல் முறைக்குச் சிங்கள மக்களிடமும், பௌத்த குருமாரிடமும் ஆதரவு திரட்டுமானால் அது நல்ல விளைவைத் தரும். நாட்டின் அரசியலில் ஒரு திருப்பத்தைக் கொண்டு வரும்.

எதிர்க்கட்சி அரசியல் லாபம் தேடி விடுமே என்ற அச்சத்தினாலும், அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்ற சொந்த நலன் கருதியும் அரசாங்கக் கட்சி மக்களுக்கு இதுவரை உண்மையை எடுத்துக் கூறத் தயங்கியதாலேயே, உகந்த தீர்வை முன்வைக்கத் தவறியதாலேயே நாட்டு நிலைமை இந்தளவுக்கு சீர் கெட்டுப் போயிருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு தெரிவுக்குழுவையே முழுக்க முழுக்க நம்பியிருப்பதாகக் கூறி வருகிறது அரசாங்கக் கட்சி. ஆனால் அங்கு சமஷ்டி முறையைத் தானும் முன்வைக்காமல். மூன்றாம் பேர் வழியான ஸ்ரீநிவாசன் மூலம் தமிழர்கள் ஏதெடுத்தும் பார்க்க முடியாத ஒரு அர்த்தமற்ற யோசனையைக் காட்டி எதிர்கட்சியின் ஒப்புதலையும் பெற்றிருக்கிறது!

இவ்வாறான கண்ணாமூச்சி ரகமான அரசியல் விளையாட்டினால் தான், நாடு இந்தளவு கீழ் நிலைக்கு வந்துள்ளது. தமிழர்கள் மட்டுமன்றிச் சிங்களவரும் வீணே அழிந்தொழிய வேண்டி உள்ளது. இவற்றை அரசும் அதன் தலைவர்களும், அரசாங்கக் கட்சியினரும் உணராதது ஏனோ? காமினியின் புதிய சிந்தனையும், துணிச்சலும் ஏனைய ஐ. தே. க. உறுப்பினர்களுக்கு வருவது எப்போது?

கடந்த பதினாறு வருடங்களாகப் பதவியிலிருக்கும் ஐ. தே. கட்சி இழைத்த தவறைத் திருத்துவதற்கு காமினியின் யோசனை ஒரு நல்ல சந்தர்ப்பம் வழங்கும். மனம் இருந்தால் இடமுண்டு. ஆளுங் கட்சி புதிய வழியில் மனங் கொள்ளுமா?

## பொங்கல் நிகழ்ச்சிகள்

குருநகர், ஜன. 13

யாழ். திருமறைக் கலாமன்றம் இம்முறை பொங்கல் விழாவைச் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

பொங்கல் தினமன்று மன்ற முன்றலில் இயக்குநர் பேராசிரியர் வண. நீ. மரியசேவியர் அடிகளார் தலைமையில் பொங்கல் நடைபெறும்.

மாலை 6-30 மணிக்கு மன்ற வெளியரங்கில் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்திரு எ. பேணாட் தலைமையில் இலங்கிய இசை நாடகமான "வளையாபதி" மேடையேறும். (ஒ-க-51)

★ ★ ★

யாழ். பட்டப்படிப்புகள் கல்லூரி பேராதனை – யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர் ஒன்றியத்தின் பொங்கல் கலைவிழா பட்டப்படிப்புகள் கல்லூரியில் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு நடைபெறவுள்ளது. (க)

★ ★ ★

வல்வெட்டித்துறை, ஜன. 13

வ'வை சனசமூக சேவா நிலையத்தினர் பொங்கல் தினத்தன்று "பட்டம்விடும் போட்டி" ஒன்றை நடத்தவுள்ளனர்.

மேற்படி நிலையத்தின் பொன்விழா ஆரம்ப நிகழ்ச்சியாகவும் இது அமையும். (ஒ-155)

★ ★ ★

நெல்லியடி சனசமூக நிலையத்தினர் நாளை பொங்கல் தினமன்று — முருகமூர்த்தி ஆலயத்திற்கு சமீபமாக — மாதிரி முன்பாடசாலை ஒன்றை திறந்து வைக்கவுள்ளனர்.

மாலை 4 மணியளவில் திறப்பு விழாவும் அதைத் தொடர்ந்து கராத்தே, வயலின் சோலோ, பட்டிமண்டபம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஒ-155)

★ ★ ★

தெல்லிப்பழை சங்கநாதத்தினர், பொங்கல் தினமன்று மாலை 3 மணிக்கு, இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் 'தைப்பொங்கல் கருத்தரங்கு' நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளனர். (ஒ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 13

தெல்லிப்பளை கோவிற்புலம் அண்ணமார் (சிவன்) ஆலயத்தில் தைப்பொங்கல் நிகழ்ச்சியும் விஷேட பூஜையும் நாளை நண்பகல் 1.00 மணிக்கு நடைபெறும். (உ)

★ ★ ★

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனமும், நல்லை ஆதீன கலை பண்பாட்டுக் கழகமும் இணைந்து வழங்கும் பொங்கல் கலைவிழா ஆதீன கலா மண்டபத்தில் நாளை பி.பகல் 2மணிக்கு ஆரம்பமாகும்.

பட்டிமன்றம், கவியரங்கம் போன்ற கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். [உ-3]

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 13

ஹற்றன் நஷனல் வங்கி யாழ் மாவட்டக் கழக அணிகளுக்கிடையில் யாழ் பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடத்தி வரும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ 3.30 மணி:- சென்றலைட்ஸ் வி. க. அணி எதிர் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி.

★ 4.30 மணி:- யாழ்ப்பாணக் கல்லூரி அணி எதிர் ஜொனியன்ஸ் சிவப்பு அணி

o o o

யாழ். மிட்ரவுன் றோட்டறக்ட் கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4மணிக்கு சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் பாடும்மீன் வி. க. அணியை எதிர்த்து பொற்பதி வி. க. அணி மோதும். (உ)

## இன்று

மருதனை, ஜன. 13

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் இன்று நண்பகல் 11 மணிக்கு கைலாசபதி அரங்கில் நடைபெறும். (உ-ரி)

o o o

மருதனை, ஜன. 13

யாழ் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ மன்றத்தின் அனுசரணையுடன், இலங்கை வங்கி உத்தியோகத்தர்களால் நடத்தப்படும் "யூனிட் ட்ரஸ்ட்" பற்றிய கருத்தரங்கு இன்று பிற்பகல் 2 மணிக்கு கைலாசபதி அரங்கில் நடைபெறும். [உ-ரி]

## கருத்தரங்கு

பருத்தித்துறை, ஜன. 13

வடமராட்சி கல்விக் கோட்டத்தில் ஆண்டு 1 வகுப்பில் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலக் கருத்தரங்கும், செயலமர்வும் நாளை மறுதினம் முதல் 19 ஆம் திகதி வரை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-11)

## ஆசிரியர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 13

சாவகச்சேரிக் கல்விக் கோட்டத்தில் கடமை புரியும் சகல சேவைக்காலப் பயிற்சி ஆலோசகர்களுக்குமான கூட்டம் ஒன்று, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்படுகின்றது. (க)

### சமாதானத்தை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாலசிங்கம் தலைமையில் நேற்றுப் பிற்பகல் மாநகர சபையின் நல்லூர்க் கிளை நூலக மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில்—

முடிவுவரை போரிடுவது என்று கூறினால் அது முட்டாள் தனமாகும். போராட்டம் நீடிக்க நீடிக்க துன்பமும் இழப்புகளும் அதிகரிக்கும். நீதியான சமாதானம்கிடைக்க நான் என்னால் இயன்ற அனைத்தையும் செய்வேன்— என்று கூறினார்

மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தமது தலைமை உரையில் "சமாதானத் தூதனாக வருகை தந்துள்ள ஆயர் அதி. வண. ஜோர்ஜ் கென்னத் பெர்னாண்டோ சமாதான யுகத்தை ஏற்படுத்தும் தமது முயற்சியில் வெற்றிபெற நாம் பிரார்த்திப்போமாக" என்று கூறினார்.

யாழ்ப்பாண மக்களின் கஷ்டங்களையும், மாநகரசபை மக்களுக்கு உரிய சேவையை வழங்க முடியாமையையும் ஆணையாளர் தமது உரையில் விவரித்தார்.

இந்த வரவேற்பு வைபவத்தில் தென்னிந்திய திருச்சபையின் ஆயர் அதி. வண. டி. ஜே. அம்பலவாணர், யாழ். ஆயர் சார்பில் அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப், வண. தேசகுமார் ஆகியோரும் யாழ்ப்பாண அரசாங்கத் திணைக்களத் தலைவர்களும் பாடசாலை அதிபர்களும், பொது மக்கள் அமைப்புகளின் தலைவர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டார்கள்.

வைபவத்தின் ஆரம்பத்தில் ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ மேள வாத்தியம் சகிதம் மாநகரசபை வாசலிலிருந்து நூல் நிலைய மண்டபம் வரை அழைத்துச் செல்லப்பட்டார்.

அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் டாக்டர் இ. தெய்வேந்திரன், மூதறிஞர் க. சி. குலரத்தினம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். டிவகலாலா ஆகியோர் கூட்டத்தில் உரையாற்றினர். பொது அமைப்புகள் சார்பில் பல மகஜர்களும் ஆயரிடம் தெரிவித்தனர். (அ-க)

ஜனாதிபதிக்கு எடுத்துரைத்து

# தமிழர்களின் இடர்களை நீக்க உதவுமாறு ஆயரிடம் கோரிக்கை

## வலி. வடக்கு புனர்வாழ்வுக் கழகம் மகஜர்

தெல்லிப்பழை, ஜன. 13

குடாநாட்டு மக்கள் சொல்லொணாக் கஷ்டங்களையும், வேதனைகளையும் அனுபவித்து வருகின்றனர் எமது மக்களின் அவலத்தை, இடர்களை தாங்கள் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்து உதவுமாறு வேண்டுகிறோம்.

வலிகாமம் வடக்கு புனர்வாழ்வுக் கழகத்தினர், அங்கிலிக்கன் ஆயரைச் சந்தித்து இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

ஆயரிடம் மேலும் பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. அந்த மகஜரில் உள்ள முக்கிய அம்சங்களாவன:-

★ வலி வடக்குப் பகுதியில் இருந்து முழுமையாக இடம் பெயர்ந்துள்ள மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்த முடியாத அவல நிலையில் உள்ளனர். இவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை ஜனாதிபதியுடன் தொடர்புகொண்டு ஏற்படுத்தித்தரவேண்டும்.

★ யாழ் குடாநாட்டில் இருந்து ஏனைய பகுதிகளுக்குச் சகல வசதியாக கேரதீவு — சங்குப்பிட்டி பாதையைத் திறக்கவேண்டும்.

★ வெளியிடங்களில் இருந்து இரு மாதங்களுக்கு ஒரு தடவைதான் தபால்கள் அதுவும் கிழிக்கப்பட்ட நிலையில் வந்து சேர்கின்றன. யாழ்ப்பாணம் வரும் சகல கப்பல்களிலும் தபால்களை எடுத்துவர ஏற்பாடு செய்ய வேண்டும்.

★ யாழ். மாவட்டத்துக்கு உணவுப்பொருள்கள் மிகக் குறைவாகவே வருவதால் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர் ஒரு நேரம் தானும் முழுமையாக— நிறைவாக சாப்பிட முடியாத நிலை. இந்த அவலநிலையை நீக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

★ மனிதனுக்கு சாதாரணமாக ஏற்படும் தடிமன், காய்ச்சல், இருமல் போன்ற நோய்களுக்குக்கூட மருந்துவகைகள் இல்லை. மருந்து தட்டுப்பாட்டை நீக்கி உதவவும் (ஒ-68)

## கிராம அலுவலர் சட்ட மூலம்

கிராமசேவை அலுவலர், என்ற பதவிப்பெயர் இனிமேல் கிராம அலுவலர் என்ற பெயர் மாற்றம் செய்யப்படவுள்ளது.

இதற்கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

பதவிப் பெயரை மாற்றுவதினால் ஏற்படும் சட்டரீதியான பிரச்சினைகளை நிவர்த்திக்குமுகமாகவே. இந்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படுவதாக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார். (ஒ-எ)

## நாளை

யாழ்ப்பாணம், ஜன. 13

தமிழர் புனர்வாழ்வுக் கழக சுயசார்பு தொழில் முயற்சி நிலையத்தின் 2ஆம் ஆண்டு நிறைவு விழாவும் சேமிப்புப் பத்திரம் வழங்கலும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயலாளர் திரு. செ. போகநாதன் தலைமையில் நடைபெறும் விழாவில் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (க)

## முதலுதவி பயிற்சி

யாழ்ப்பாணம், ஜன. 13

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி-வடக்குப் பிரிவு எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் முதலுதவிப் பயிற்சி வகுப்புகளை நடத்தவிருக்கின்றது. (க)

## விவேகானந்தர் ஜெயந்தி விழா

நவாலி, ஜன. 13

சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருநெல்வேலி இராமகிருஷ்ணாலய மண்டபத்தில் நடைபெறும். (த-100)

★ ★ ★

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தின் ஏற்பாட்டில் சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் திதி பூஜையும், சுவாமி விவேகானந்தர் இளைஞர் மாநாடும் சேவாச்சிரமத்தில் நாளை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும். (த-ரி)

## 2 தமிழர்கள் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஜன. 13

மட்டக்களப்பில் கல்லடி குடாப் பகுதிக்குச் சென்று திரும்பிய இரு தமிழர்கள் மண்டபத்தடி கிராமத்தில் அமைந்துள்ள காவலரணுக்கு அருகில் வைத்து படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

டட்லி ஹென்றி (வயது 45) சுந்தரம் விஸ்வராசா (வயது 26) ஆகிய இருவருமே சுட்டுக் கொல்லப்பட்டனர். (உ-3)

### பம்பாய்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரம்தமிழர்கள் பம்பாயிலிருந்து அகதிகளாகத் தமிழகம் வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது (உ-6)

### சுப்பசொனிக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றுக் காலை 8 மணியளவில் திடீரென வந்து சாவகச்சேரிப் பகுதியை வட்டமிட்ட இரு சுப்பர்சொனிக் விமானங்களில் ஒன்று மட்டுவில் மகாவித்தியாலயத்துக்கு அருகில் உள்ள உடையார் வளவு என்ற இடத்தில் மூன்று குண்டுகளை அடுத்தடுத்து வீசியது.

இத் தாக்குதலில் அப்பகுதியில் நின்ற பல பயன்தரு மரங்கள் நாசமடைந்தன

குண்டு வெடித்த சத்தத்தின் அதிர்ச்சியால் மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்துக்கு அருகில் வசித்து வந்த வயோதிபப் பெண் ஒருவர் மரணமானார்.

குண்டு வெடித்த இடத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தூரத்தில் மரணவீடு ஒன்றில் இருந்த பெண் ஒருவர் குண்டின் சிதறலினால் காயமடைந்தார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த தர்மலிங்கம் இலட்சுமியம்மா (வயது 45) என்ற இந்தப் பெண் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (உ-3-15-17-131-161-ரி)

### சாவகச்சேரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நொறுங்கின.

விற்பனைக்குத் தாம் கொண்டுவந்திருந்த பொருள்களை வியாபாரிகள் அப்படியே கைவிட்டு விட்டு பாதுகாப்புத் தேடி ஓடிய போது, அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி திருடர்கள் தம் கைவரிசையைக் காட்டினர்.

பல வாழைக்குலைகளும், தேங்காய்களும் களவு போயின. (உ-ரி-17-117)

## மிதி வெடியில் காலை இழந்தார் சப்இன்ஸ்பெக்டர்!

யாழ்ப்பாணம், ஜன. 13

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்குச் சமீபமாக மிதிவெடியில் சிக்கிய பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் காலை இழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாயன்று இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் விஜயசேகர என்பவரே காலை இழந்தவர் ஆவார். (ஒ 3)

### பிரபா - ஆயர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களும் கொழும்புப் பத்திரிகைகளில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன.

இந்த விடயம் குறித்து பிரெஞ்சு செய்தி நிறுவனமான ஏ. எவ். பியின் கொழும்புச் செய்தியாளர் அமால் ஜெயசிங்க பி. பி. ஸிக்கு பேட்டியளித்தார். அப்பேட்டியில் அவர் கூறியதாவது:-

"பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் நல்லெண்ண நடவடிக்கையாக இரு பொலிஸாரை விடுவிக்க விடுதலைப் புலிகள் இணங்கியிருக்கிறார்கள். மேலும் ஆயர் யாழ். சென்றதும் அவர் யாழ்ப்பாணத்தை அடைந்த மார்க்கம் போன்ற மற்றைய சமிக்ஞைகளும் பெரும்பாலும் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கான திரைமறைவு நடவடிக்கைகள் — ஏதோ ஒரு நிலையில் — நடப்பதைக் காட்டுகின்றன.

கேள்வி:- அரசின் சார்பில் மத்தியஸ்தராக ஆயர் பங்கு பற்றுகிறார் என நீங்கள் நினைக்கிறீர்களா?

பதில்:- அதனை இப்போது முன்கூட்டியே கூறுவது கஷ்டம். ஆனால் ஆயர் — பிரபா சந்திப்பு, அவர்களின்பேச்சு ஆகியவைபற்றிய செய்திகளுக்கு அரசு சார்புப் பத்திரிகைகளில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது:

ஏது எப்படி என்றாலும் இரு தரப்பும் இந்தச் சந்தர்ப்பத்தை ஏதோ ஒரு வகையான பேச்சை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பாக பயன்படுத் விரும்புகின்றன.

கேள்வி:- பேச்சுவார்த்தை தொடர்பாக தங்களது நிலைப்பாடு என்னவென்பதை பிரதான சிங்கள இனவாதக் கட்சிகள் கடந்த சில மாதங்களாகத் தெளிவுபடுத்தியுள்ளன. இந்த நிலையில் புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க அரசு விரும்புகிறது எனக் கருதுகிறீர்களா?

பதில்:- அரசு நேரடியாகப் பேச விரும்பவில்லை ஆனால் புலிகள் பேச்சை ஆரம்பிக்க விரும்புவதாக சமிக்ஞை காட்டுவது போல் தெரிகிறது.

அதேவேளை, பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசும் சிரத்தையாக இருக்கிறது

ஏதேனும் ஒரு தேர்தல் நடத்துவதாயின் வடக்கு - கிழக்கில் வன்செயல்கள் நிறுத்தப்பட வேண்டும். அதற்கு எந்த வகையிலாவது பேச்சுவார்த்தை நடக்க வேண்டும். அப்படி நடந்தால்தான் இரு தரப்புக்கும் தற்காலிக ஓய்வு கிடைக்க முடியும்.— என்றார். [உ-த-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகாம்பிகை கந்தையா

அராலி கிழக்கைச் சேர்ந்தவரும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கனகாம்பிகை கந்தையா 12-01-1993 இல் சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ் சென்றவரும், நீர்வேலியைச் சேர்ந்தவருமான இளைப்பாறிய தபாலதிபர் கணபதிப்பிள்ளை கந்தையாவின் அன்பு மனைவியும், திருமதி பஞ்சலஷ்மி கிருஷ்ணனின் (ஆசிரியை, யாழ்ரன் கல்லூரி, காரைநகர்) அன்புத் தாயாரும், கிருஷ்ணவேணி, திருமதி ஜெயராஜசிங்கம் - கிருஷ்ண ஜெயந்தி (றெட்பானா), கிருஷ்ணவல்லி, யாதவகிருஷ்ணன, கிருஷ்ணஜோதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மயூரியின் அன்புப பூட்டியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (13-01-1993) புதன்கிழமை காலை 9 மணியளவில் வழுக்கையாறு மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

திருமதி ப. கிருஷ்ணன்.

பழைய ஆஸ்பத்திரி வீதியடி,
வட்டு மேற்கு.
வட்டுக்கோட்டை. (24051)

## வல்லிபுரம் இராசமணி

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

திரு. வல்லிபுரம் இராசமணி 12-01-1993 அன்று அதிகாலை காலமானார்.

இவர் திருமதி மலர் அவர்களின் அன்புக் கணவரும், இரவீந்திரன் (பிரான்ஸ்), நந்தினி, நிமலேந்திரன் (பிரான்ஸ்) மகேந்திரன் (பிரான்ஸ்), இரஞ்ஜனி (ஆசிரியை, வேலணை சரஸ்வதி), யோகேந்திரன் (யாழ் மருத்துவபீடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவக்கொழுந்து, தவமணி, பவளம், சுகிர்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கந்தசாமி (ஆசிரியர் - பாண்டியன்குளம் ம வி.) அவர்களின் அன்பு மாமனாரும், பாலமுரளி, சிவசக்தி ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (13-01-1993) புதன்கிழமை காலை 9-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

இல. 100, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (24050)

## திருமதி இலட்சுமி அருச்சுனர்

கோட்டைக்காடு மல்லாகத்தைச் சேர்ந்த திருமதி இலட்சுமி அருச்சுனர் 1993-0 -12 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற அருச்சுனரின் அன்பு மனைவியும், தர்மலிங்கம், சுந்தரலிங்கம், இரத்தினசிங்கம் (ஜமுனா சவுன்ஸ் உரிமையாளர்), அமுதலிங்கம், சங்கரலிங்கம் (சவுதி), பரமேஸ்வரி, பூமணி, தங்கமலர் (மணி) ஆகியோரின் அருமைத் தாயாரும், புண்ணியமூர்த்தி (வியாபாரி, சுன்னாகம்), விக்னேஸ்வரன் (சவுதி), இந்துமதி, ரஞ்சினி, சுதன், செல்வராசா, சர்மிளா, லிங்கேஸ்வரன (சவுதி), திஸ்சியரூபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற நடேசு, தில்லையர், சினிவாசகம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-01-1993) புதன்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
சினிவாசகம்

கோட்டைக்காடு,
மல்லாகம். (5484)

## எம். எஸ். கந்தையா சண்முகநாதன் (சச்சி)

(கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவன்)

தாவடி பிரபல சுருட்டுத் தொழில் அதிபர் காலஞ்சென்ற M. S. கந்தையா, திருமதி கந்தையா ஆகியோரின் புதல்வன் சண்முகநாதன் (சச்சி) இத்தாலியில் காலமானார்.

இவர் செல்லத்துரை, மகேஸ்வரி, சுப்பிரமணியம் (கொழும்பு), மகேஸ்வரன் (சிமெந்துக் கூட்டுத்தாபனம் கொழும்பு), மகாலிங்கம் (பொறியியலாளர், பாரெய்ன்), முத்துலிங்கம், மோகனதாஸ் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி), புவனேஸ்வரன் (வர்த்தகர், தாவடி), காலஞ்சென்ற நித்தியானந்தன், இராஜேஸ்வரி, கௌரி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற P. M. இராசரத்தினம், பரமேஸ்வரி, ரஞ்சனா, செல்வராணி, அருந்ததி, சசிகலா, தங்கராணி, ஸ்ரீகணேசன் (உரிமையாளர், பரணி மருந்தகம்), சுந்தரமோகன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (13-01-1993) புதன்கிழமை இத்தாலியில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்;
எம். எஸ். கே. முத்துலிங்கம்
(சகோதரன்)

கே. கே. எஸ். வீதி,
தாவடி. (21057)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13-01-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

யாழ். மக்களின் கஷ்ட நிலை குறித்து

# தம்மிடம் வழங்கப்பட்ட அறிக்கையை ஆயர் ஜனாதிபதியிடம் ஒப்படைப்பார்

யாழ்ப்பாணம், ஜன 13

யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய நிலை குறித்தும் மக்கள் படும் கஷ்டங்கள் குறித்தும் அரச சார்பற்ற நிறுவனங்கள் சமர்ப்பித்த மிக விரிவான அறிக்கையை தாம் ஜனாதிபதியிடம் ஒப்படைத்து—

யாழ். குடாநாட்டு மக்களின் கஷ்டங்களைப் போக்குமாறு வலியுறுத்த இருப்பதாக அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் அதி. வண கென்னத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையில், இணையப் பிரதிநிதிகளுடன் ஆயர் நேற்றுக் காலை கலந்துரையாடினார் அப்போது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவான அறிக்கை ஆயரிடம் கையளிக்கப்பட்டது

இணையத்தினால் தயாரிக்கப்பட்ட யாழ். மாவட்ட போசாக்கின்மை நிலை பற்றிய அறிக்கை வடிவிலான நூலையும் ஆயர் வெளியிட்டு வைத்தார்.

### கண்ணீர் சிந்தினார்

ஆயர் நேற்றுக் காலை சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு விஜயம் செய்தார். அங்கு அவரை வரவேற்று மாணவிகள் பாடிய பாடலைக்கேட்டு அவர் கண்ணீர் சிந்தினார்.

மாணவிகளின் பாடலில் யாழ்ப்பாண மாணவர் படிப்பதற்கு உள்ள கஷ்டங்கள் கருப் பொருள்களாக அமைந்திருந்தன. படிப்பதற்கு மண்ணெண்ணெய் இல்லை; பரீட்சை நடக்கும் வேளை விமானத் தாக்குதல் நடத்தல் ஆகியவையும் கருப்பொருள்களில் அடங்கும்.

''யாழ். மாணவர்கள் கல்வி பயில உள்ள தடைகளைக் கேட்டு நான் மனம் தளர்ந்து விட்டேன்'' — என்று ஆயர் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

(அ-162-3-17)

# தாயகம் திரும்பிய மக்கள் ஆசிகுளம் அகதிமுகாமில்

கொழும்பு, ஜன. 13

அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தின் மேற்பார்வையில் வவுனியா - ஆசிகுளத்தில் இயங்கத் தொடங்கியுள்ள அகதி முகாமிற்கு இந்தியாவில் இருந்து திரும்பிய 280 அகதிகள் கடந்த ஞாயிறன்று அனுப்பப்பட்டனர். இவர்கள் அனைவரும் வவுனியா ரயில் நிலையத்துக்கு அருகில் தங்கியிருந்தவர்கள் ஆவர்.

ஆசிகுளம் அகதிமுகாம் 65 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

(ஓ-எ)

## திருத்தம்

11-1-93 திங்கட்கிழமை உதயன் இரண்டாம் பக்கத்தில் வெளியான ''சேவை நலம் பாராட்டு'' விளம்பரத்தில்—

பிரதான வாழ்த்துச் செய்தி வழங்கியவரின் பெயர் சி. புலேந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்றிருக்க வேண்டும். சி. புவனேந்திரன் என்று அச்சாகியது தவறாகும்.

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன. 1

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஷெல்கள் தெல்லிப்பழை, விளான், ஏழாலை வடக்கு, குப்பிளான் பகுதிகளில் விழுந்து வெடித்தன.

(உ-17-45)

## அறிவித்தல்

16.1 93 சனிக்கிழமை காலை 6. 5 மணிக்கு 25 மைல் சைக்கிள் ஓட்டமும், 5 மைல் மரதன் ஓட்டமும் நடைபெறவுள்ளது.

இப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக ஏற்கனவே பதிவு செய்தவர்களும், பங்குபற்ற விரும்புபவர்களும் 15.01.93 வெள்ளி காலை 10 மணிக்கு முன்னர் நிலையத்தில் தொடர்பு கொள்ளவும்.

வாலையம்மன் சனசமூக நிலையம்
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

இரா. மதியழகன்
பொன் விழாக்குழு செயலாளர்.
(24055)

## காணவில்லை

### மாதன் வீரகத்தி



புத்தூர் கிழக்கைச் சேர்ந்த மாதன் வீரகத்தி என்பவரை 9-1 93 சனிக்கிழமை மாலை 6.00 மணி முதல் காணவில்லை. இவர் வெள்ளை ரீ சேட்டும் பச்சை — சொக்லேட் நிற பிஜாமா சாரமும் அணிந்து E 465521 இலக்க கறுப்பு நிற சைக்கிளில் சென்றவர் திரும்பி வரவில்லை

இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து பின்வரும் விலாசத்திற்கு அறிவிக்கவும்.

திருமதி வீரகத்தி பூமணி
குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர். (24042)

## சர்மா இலங்கை வருவார்

இந்திய ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா எதிர் வரும் ஜூன் மாதம் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளுவார்.

இத்தகவலை இந்திய மத்திய வெளியுறவு இணை அமைச்சர் எட்வர்டோ பெலறோ கொழும்பில் வெளியிட்டார். (த எ)

# மரண அறிவித்தல்கள்

## கந்தப்பு நல்லதம்பி

(ஓய்வுபெற்ற அதிபர், அ. மி. த. க. பாடசாலை இலகடி, காரைநகர்)

## நல்லதம்பி விஜயலட்சுமி

(ஓய்வுபெற்ற ஆசிரியை, அ. மி. த. க. பாடசாலை, இலகடி, காரைநகர்)

காரைநகர் மொந்திபுலத்தை பிறப்பிடமாகக் கொண்ட கந்தப்பு நல்லதம்பி (அதிபர்) 5-1-93 அன்று வவுனியாவிலும், அன்னாரின் பாரியார் திருமதி நல்லதம்பி விஜயலட்சுமி 4-1-93 இல் காரைநகரிலும் சிவபதமடைந்து விட்டனர்

இவர்கள் காலஞ்சென்ற கதிர்காமநாதன் [துறைமுக கூட்டுத்தாபனம்], சபாநாதன் [பிரதம சுகாதார உத்தியோகத்தர், சுசரோக வைத்திய நிலையம், வவுனியா], திருமதி சகுந்தலா [விவாகப் பதிவாளர், காரைநகர், ஸ்ரீகாந்தா [சட்டத்தரணி], உஷாதேவி [ஆசிரியை, யாழ்ரன் கல்லூரி] ஆகியோரின் அன்புப் பெற்றோரும், பொன்னம்மா [பிரதம தாதி, கோட்டக்காடு வைத்திய நிலையம்], தேவகல்யாணி, S. A. E. ஏகநாதன் [சட்டத்தரணி], ஸ்ரீவள்ளி [சட்டத்தரணி], செல்வரத்தினம் [அதிபர், ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை, சுழிபுரம்] ஆகியோரின் அன்பு மாமன் மாமியாரும், பிரேமலதா [சட்டத்தரணி], சுவர்ணலதா, விஜயலதா, விஜயகுமார், விஜயநாதன், ஜெயலதா, கருணாகரன், நந்தகுமாரன், சிவானந்தா, காலஞ்சென்ற விஜியானந்தா [விஜி], ஜெயந்தி [யாழ். பல்கலைக்கழகம், முகாமைத்துவபீடம், முதலாம் பிரிவு], வருணானந்தா, விஜியபவானந்தா, சுபாஸ், நிவேதிதா, ஜெயபிரகாஷ், பேதா, வினோதராசா, யசோதா, சிவசங்கரி, சிவாஜினி, சிவகணேஷ், சிவகஜன் ஆகியோரின் அன்புப் பேரன், பேத்தியுமாவர்.

இவர்களின் ஈமக்கிரியைகள் வவுனியாவிலும், காரைநகரிலும் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்,

இன்று அத்தியடி புதுவீதி, 30/11 இலக்க இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்

தகவல் :
திருமதி சகுந்தலா ஏகநாதன்

30/11, அத்தியடி புதுவீதி,
யாழ்ப்பாணம். [24056]

## கந்தையா மார்க்கண்டு

கெருடாவில் சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தையா மார்க்கண்டு சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் ஏ. கே. சோமசுந்தரம் (உதவித் தபால் அதிபர், கொடிகாமம்), திருமதி மகேஸ்வரி முத்துலிங்கத்தின் சகோதரனும், திரு. வி. முத்துலிங்கம், திருமதி சுந்தரராணியின் மைத்துனரும், மகேந்திரம், மனோகரன், மகேஸ்வரன், தேவபாலன், திருமதி விஜியரத்தினம் மனோரஞ்சினி, சுகதாசன், ஜெகதாசனின் மாமனாரும், வைதேகி, நந்தகோபன் ஆகியோரின் பெரியதகப்பனும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று (13-01-1993) புதன்கிழமை காலை 10 மணிக்கு மட்டுவில் கிழக்கில் உள்ள சகோதரனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
A. K. சோமசுந்தரம்

மட்டுவில் கிழக்கு.
(24054)

## கந்தையா சதாசிவம்

நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், முன்னாள் கிராமசபை எழுதுவினைஞரும் ஆகிய, கந்தையா சதாசிவம் 11-01-93 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னாச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அம்பலவாணர் கச்சேரி எழுதுவினைஞர்) அவர்களின் அன்புத் தந்தையும், தங்கரட்ணத்தின் அன்பு மாமனாரும், உமாசுதன் (கனடா), சுதாசுதன் (லண்டன்), சிவாசுதன் (கொழும்பு), சதாசுதன் (சுவிஸ்), தவமலர், (கனடா), சாருமதி (லண்டன்) ஆகியோரின் பேரனும், சுபாங்கியின் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12-01-93 அன்று நீர்வேலி மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சி. அம்பிகையோதி

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (24058)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org